Print Fact Sheet

OWA
OFFICE OF THE WORKER ADVISER

BUREAU DES CONSEILLERS DES TRAVAILLEURS
BCT

# பணியிடத்தில் காயமடைந்தீர்களா?

## Office of the Worker Adviser ( தொழிலாளர் ஆலோசக அலுவலகம்) -இடமிருந்து உதவி பெறுதல்

### தொழிலாளர் ஆலோசக அலுவலகம் (OWA) என்பது என்ன?

தொழிலாளர் ஆலோசக அலுவலகம் (OWA) என்பது Ontario Ministry of Labour (ஒன்றாரியோ தொழில் அமைச்சகத்தின்) கீழியங்கும் தன்னாட்சி அமைப்பு. சங்கத்தில் இல்லாத காயமடைந்த தொழிலாளர்களுக்கும், பணியின் காரணமாக உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் பணியிடக் காப்பீட்டு (இன்ஷ்யூரன்ஸ்) விஷயத்தில் (முன்னர் தொழிலாளர் இழப்பீடு என அழைக்கப்பட்டது) நாங்கள் இலவச சேவை வழங்குகிறோம். தொழிலாளர் ஆலோசக அலுவலகம் (OWA) என்பது Workplace Safety and Insurance Board (WSIB-பணியிடப் பாதுகாப்பு மற்றும் காப்பீட்டு வாரியத்தின்) அமைப்பு அல்ல.

### OWA உங்களுக்கு எவ்வாறு உதவ முடியும்?

நீங்கள் காயமடைந்த தொழிலாளர் அல்லது அவரது வாரிசு என்றால், OWA இவற்றைச் செய்ய இயலும்:

- WSIB வாரியத்தில் அல்லது Workplace Safety and Insurance Appeals Tribunal (WSIAT – பணியிடப் பாதுகாப்பு மற்றும் காப்பீட்டு மேல்முறையீட்டு மன்றத்தில்) உங்கள் சார்பில் பிரதிநிதியாக செயல்படுவது,
- உங்களுக்கு ஆலோசனை வழங்குவது, பணியிடக் காப்பீட்டில் பொதுவான பிரச்சினைகள் பற்றிய எழுத்து ஆவணங்களை அளிப்பது,
- வேறு எங்கே உதவி கிடைக்கும் என்பதை உங்களுக்குத் தெரிவிப்பது,

பணியிடக் காப்பீடு குறித்து தொழிலாளர்களுக்கும் அவர்களின் பிரதிநிதிகளுக்கும் கல்வி கற்பிக்கும் நிகழ்ச்சிகளையும் OWA நடத்துகிறது.

### OWA வழங்கும் சேவைக்குக் கட்டணம் ஏதும் உண்டா?

இல்லை. OWA உங்களுக்கு இலவசமாக உதவி செய்யும்.

### OWA-இடமிருந்து யார் உதவி பெற முடியும்?

எந்த தொழிற்சங்கத்திலும் உறுப்பினராக இல்லாத எல்லா தொழிலாளர்களுக்கும் OWA உதவி செய்கிறது. சட்டத்தின்படி சங்க உறுப்பினர்களுக்கு OWA சேவை அளிக்க இயலாது.

நீங்கள் ஒரு சங்கத்தில் உறுப்பினராக இருந்தால், OWA ஊழியர்கள்-

- உங்கள் வழக்கில் நடவடிக்கை எடுப்பதற்கு காலக்கெடு ஏதும் உண்டா என்பதைத் தெரிவிப்பார்கள்,
- உதவி பெறுவதற்கு சங்கத்தை அணுகுமாறு திருப்பி அனுப்புவார்கள்.

### சங்கத்தின் உறுப்பினர் என்பவர் யார்?

சங்கம் அமைக்கப்பட்ட ஒரு பணியிடத்தில் பேரம் பேசும் அமைப்பின் உறுப்பினராக நீங்கள் இருந்து, அந்தப் பணியிடத்தில் காயமடைந்திருந்தால் OWA உங்களை சங்க உறுப்பினர் என்று கருதும்.

பின்வரும் விஷயங்கள் இருந்தால், OWA உங்களுக்கு உதவி செய்ய இயலும்:

- சங்கம் அமைக்கப்பட்ட பணியிடத்தில் நீங்கள் காயமடைந்தீர்கள், ஆனால் தற்போது சங்கம் இல்லாத இடத்தில் பணி செய்கிறீர்கள்,
- சங்கம் அமைக்கப்பட்ட ஒரு பணியிடத்திலிருந்து நீங்கள் பணியிலிருந்து ஓய்வு பெற்றீர்கள், ராஜினாமா செய்தீர்கள், அல்லது விலகி விட்டீர்கள்,
- சங்கம் அமைக்கப்பட்ட பணியிடத்தில் நீங்கள் லே-ஆஃப் தரப்பட்டீர்கள் அல்லது வேலையை இழந்தீர்கள் (அதே வேலையை திரும்பப் பெறுவதற்கான உதவி தேவைப்படுபவர் அல்ல என்றால் மட்டுமே),
- நீங்கள் தற்போது சங்கம் அமைக்கப்பட்ட பணியிடத்தில் வேலை செய்கிறீர்கள், ஆனால் நீங்கள் வேறொரு பணியிடத்தில் நிகழ்ந்ததற்காக இப்போது இழப்பீடு கோருகிறீர்கள்,

Ontario

- வேலைக்கான காத்திருப்புப் பட்டியலில் நீங்கள் இருக்கிறீர்கள், ஆனால் கடந்த கஉ மாதங்களில் வேலை செய்ததில்லை,
- பணியிடத்தில் ஏற்பட்ட காயத்தினால் அல்லது நோயினால் மரணமடைந்த, சங்கத்தில் இருந்த தொழிலாளரின் வாரிசு நீங்கள்; ஆனால் சங்கம் உங்களுக்கு உதவ இயலவில்லை.

## OWA-இடமிருந்து நீங்கள் எப்படி உதவி பெற முடியும்?

தொலைபேசி வழியாக ஆலோசனை வழங்கக்கூடிய நபருடன் பேசுவதற்கு, கனடா முழுவதும் செயல்படும் இலவசத் தொலைபேசியை அழைக்கலாம். ஆங்கிலத்தில் பேச 1-800-435-8980; பிரெஞ்சு மொழியில் பேச 1-800-661-6365. உங்களுக்குப் பக்கத்தில் ஏதேனும் OWA அலுவலகம் இருந்தால் அந்த அலுவலகத்துடன் உடனடியாக தொடர்புபடுத்தப்படுவீர்கள். தொலைபேசியில் அழைக்கும்போது கீழ்க்கண்ட தகவல்களை தயாராக வைத்துக்கொள்ளவும்:

- உங்கள் WSIB முறையீட்டு எண் அல்லது WSIAT மேல்முறையீடு எண்,
- உங்களுக்கு விபத்து நிகழ்ந்த தேதி,
- உங்களுக்கு ஏற்பட்டுள்ள காயம் எப்படிப்பட்டது,
- காயம் பட்டபோது நீங்கள் வேலை செய்த இடத்தின் வேலையளிப்பவரின் பெயர்,
- நீங்கள் ஆலோசனை பெற விரும்புகிற WSIB முடிவுகள் அல்லது கடிதங்கள் பற்றிய விவரம்.

## OWA உங்களுக்காக எப்போது மேல்முறையீடுகளில் பிரதிநிதித்துவம் செய்யும்?

WSIB வாரியத்தில் அல்லது WSIAT மேல்முறையீட்டின் இறுதி நிலை வரையில் OWA உங்களுக்காக பிரதிநிதித்துவம் செய்ய இயலும். ஆயினும், உங்களுக்காக எந்த அளவுக்கு பிரதிநிதித்துவம் செய்ய முடியும் என்பது எங்களிடம் உள்ள வசதியையும் உங்கள் பிரச்சினை எப்படிப்பட்டது என்பதையும் பொறுத்தது. நாங்கள் உங்களுக்காகப் பிரதிநிதித்துவம் செய்கிறோமோ இல்லையோ, உங்கள் வழக்கில் நீங்கள் பின்பற்ற வேண்டிய கால அளவைப் பற்றித் தெரிவிக்க OWA ஊழியர்கள் உதவுவார்கள். உங்கள் முறையீட்டு உரிமைகளைப் பாதுகாக்க WSIB அல்லது WSIATக்கு முறையீட்டுக் கடிதம் பதிவு செய்வதற்கு நாங்கள் உதவுவோம்.

## ஆங்கிலம் மற்றும் பிரெஞ்சு மொழி தவிர வேறு மொழிகளிலும் OWA சேவை வழங்குகிறதா?

ஆங்கிலம் மற்றும் பிரெஞ்சு மொழிகளில்தான் OWA பிரதானமாக சேவை அளிக்கிறது. எமது சில அலுவலகங்களில் இதர மொழிகளிலும் சேவை கிடைக்கக்கூடும். இருப்பினும், எமது சேவை ஒரு அளவுக்கு உட்பட்டதுதான்.

எனவே, உங்களால் ஆங்கிலம் அல்லது பிரெஞ்சு பேச இயலாது என்றால், OWA அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளும்போது உங்கள் மொழியும் ஆங்கிலம் அல்லது பிரெஞ்சு மொழியும் தெரிந்த, உங்களுக்கு நம்பத்தகுந்த ஒருவரை உடன் அழைத்துச் செல்வது அவசியம். ஒரு வழக்கு விவாதத்தின்போது உங்களுக்காக பிரதிநிதித்துவம் செய்வதென OWA ஒப்புக்கொண்டால், தொழில் முறை உரைபெயர்ப்பாளர் ஒருவரை ஏற்பாடு செய்ய இயலும்.

## முக்கியத் தகவல்

WSIB வாரியத்தின் முடிவின்மீது மேல்முறையீடு செய்ய காலவரம்பு உண்டு. ஒரு முடிவைப் பற்றி மேல்முறையீடு செய்ய நீங்கள் விரும்பினால் தகுதிபெற்ற ஒரு பிரதிநிதியை இயன்ற அளவுக்கு விரைவாக அணுகவும். காலவரம்பைப் பற்றி மேலும் விவரங்கள் அறிய " Appealing to WSIB" மற்றும் " Appealing to WSIAT" ஆகிய பிரசுரங்களைப் பார்க்கவும்.

**இந்தத் தகவல் பிரசுரம் பொதுவான தகவல்களை மட்டுமே தருகிறது. இது சட்டரீதியான ஆவணம் அல்ல. சட்டம் என்ன சொல்கிறது என்பதை அறிய, Workplace Safety and Insurance Act மற்றும் WSIB கொள்கைகளைப் பார்க்கவும். உங்களுக்கு உதவி தேவைப்பட்டால், உதவுவதற்கு சங்கம் இல்லை என்றால் தொழிலாளர் ஆலோசக அலுவலகத்தை (OWA) தொடர்பு கொள்க:**

- எமது இலவசத் தொலைபேசி எண்: 1-800-435-8980 (ஆங்கிலம்), 1-800-661-6365 (பிரெஞ்சு)
- அல்லது எமது இணையத்தளத்தைப் பார்க்கவும் http://www.owa.gov.on.ca

*இந்தத் தகவல் பிரசுரம் ஆங்கிலம் மற்றும் பிரெஞ்சு மொழியிலும் கிடைக்கும்*

Ontario